# பிரார்த்தனைகள் -1

## குர்ஆன் – ஹதீஸில் இடம் பெற்றுள்ள துஆ மற்றும் திக்ர்கள்

பிரார்த்தனைகள் என்பது வணக்கத்தின் நிறைவு "அல்லாஹ்வை அவனுக்கு தகுதியான வார்த்தையால் புகழ்வீராக இன்னும் என் மீது ஸலவாத்து சொல்லி அதன் பிறகு அவனிடம் பிரார்த்திப்பீராக என்று கூறினார்கள். ஆதாரம் (திர்மிதி, நஸாஈ, மிஸ்காத்)

**துஆ அரபியில்:** அஊது பில்லாஹி மின் ஜஹ்தில் பலாயி வதர்கிஷ் ஷகாயி வ ஸூயிலல் களாயி வஷமாததில் அஃதாயி

**பொருள்:** கடுமையான துன்பத்தை விட்டும் துர்ப்பாக்கியம் அடைவதை விட்டும் விதியின் தீமையை விட்டும் எதிரிகளின் எக்காளத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**துஆ அரபியில்:** அல்லாஹும்ம இன்னீ அவூது பி(க்)க மினல் ஹம்மி வல் ஹுஸ்னி வமினல் அஜ்ஸி வல் கஸ்லி வ மினல் ஜுப்னி வல் பு ூக்லி வமினல் மஃஸமி வல் மஃக்ரமி வமின் கஃலபதித் தைனி வ கஹ்ரிர் ரிஜால்.

**பொருள்:** யா அல்லாஹ்! கவலை , இயலாமை, சோம்பல், கோழைத்தனம், கஞ்சத்தனம், பாவம், கடன் மற்றும் கடன்களின் பாரம் , பிற மனிதர்களின் கொடுமைகள் ஆகியவற்றை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**துஆ அரபியில்:** அஊதுபிகல்லாஹும்ம மினல் பரஸி வல் ஜுனூனி வல் ஜுஸாமி வமின் ஸய்யியில் அஸ்காம்.

**பொருள்:** வெண்குஷ்டம்,பைத்தியம், தொழு நோய் , மற்றும் பிற கொடிய நோய்கள் அனைத்தை விட்டும்-யா அல்லாஹ் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**துஆ அரபியில்:** அல்லாஹும்மஸ்துர் அவ்ராத்தீ வ ஆமின் ரவ்ஆத்தி வஹ்ஃபள்னீ மின் பைனி யதய்ய வ மின் ூகல்Fபீ வஅன் யமீனி வஅன் ஷிமாலி வமின் Fபௌக்கீ வ அஊது பி அள்மதி(க்)க மின் அன் உஃக்தால மின் தஹ்த்தீ.

**பொருள்:** இறைவா என்னுடைய பலவீனங்களை மறைப்பாயாக. என் அச்சங்களை அகற்றி எனக்கு அமைதி தருவாயாக. எனக்கு முன்பிருந்தும் பின்னாலிருந்தும் எனது வலது புறமிருந்தும் இடது புறமிருந்தும் எனக்கு மேலிருந்தும் எனக்குப் பாதுகாப்பு அளிப்பாயாக. இன்னும் கீழே இருந்து எதிர்பாராத விதமாக கொல்லப்படுவதில் இருந்து -உனது கண்ணியத்தைக் கொண்டு பாதுகாப்புத் தேடுகிறேன்.

**துஆ அரபியில்:** அல்லாஹும் மஃக்Fபிர் க(த்)தீஅ(த்)தீ வஜஹ்லீ வ இஸ்ரா Fபீ , Fபீ அம்ரீ வமா அன்த அஃலமு பிஹி மின்னீ அல்லாஹும் மஃக்க Fபிர் லீ ஜத்தி வஹஸ்லீ வக(த்)தயீ வஅம்தீ வகுல்லு தாலிக இன்தீ.

**பொருள்:** யா அல்லாஹ்! எனது பாவத்தையும் எனது அறியாமை யையும் எனது விஷயத்தில் நான் மேற்கொள்ளும் வரம்பு மீறல் களையும் மற்றும் எந்தப் பிழைகளை என்னைவிட நீ அதிகம் அறிந்துள்ளாயோ அந்தப் பிழைகளையும் மன்னிப்பாயாக. இறைவா! நான் விரும்பி நாடி செய்த பிழைகளையும் விளையாட்டாகச் செய்த தவறுகளையும் மன்னிப்பாயாக! நான் தவறுதலாக செய்தவற்றையும், வேண்டுமென செய்தவற்றையும் மன்னிப்பாயாக!

**துஆ அரபியில்:** அல்லாஹும்ம மஃக் Fபிர் லீ மா கத்தம்(த்)து வமா அ ூக்கர்து வமா அஸ்ரர் (த்)து வமா அஃலன்து வமா அன்(த்)த அஃலமு பிஹி மின்னீ அன்தல் முகத்திம். வ அன்தல் முஅ ூக்கிர் வஅன்த அலா குல்லி ஷைஇன் கஸீர்.

**பொருள்:** நான் முன்னர் செய்த பாவங்களையும் பின்னர் செய்த இரகசியமாய் செய்த பகிரங்கமாய்ச் செய்த பாவங்களையும் மேலும் எந்தப் பிழைகளை என்னை விட நீ அதிகம் அறிந்துள்ளாயோ அந்தப் பிழைகளையும் மன்னிப்பாயாக! முன்னதாக அல்லது தாமதமாக ஏற்பட்ட அனைத்துப் பொருள்களையும் உருவாக்கியவன் நீயே! மேலும் நீ அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவனாய்த் திகழ்கின்றாய்!

## குர்ஆன் – ஹதீஸில் இடம் பெற்றுள்ள துஆ மற்றும் திக்ர்கள் (2)

**துஆ அரபியில்:** ரப்பனா லா துஸிஃக் குலூபனா பஃத இத் ஹதைத(த்)தனா வ ஹப்லனா மி(ன்ல்)லதுன்(க்)க ரஹ்மதன், இன்னக அன்தல் வஹ்ஹாப்.

**பொருள்:** எங்கள் இரட்சகனே! எங்களை நீ நேர்வழியில் செலுத்திய பிறகு எங்களை வழிபிறழச் செய்து விடாதே! மேலும் உன்னருளில் இருந்து எங்களுக்கு கொடை வழங்குவாயாக! நிச்சயமாக நீயே உண்மையில் தாராளமாக வழங்குபவனாக இருக்கிறாய்!

**துஆ அரபியில்:** ரப்பி ஹப்லீ மின்(ல்)லதுன்(க்)க துர்ரிய்யதன் தய்யிபதன் இன்னக ஸமீஉத் துஆ.

**பொருள்:** என் இரட்சகனே! உன்னிடம் இருந்து எனக்கு தூய்மையான சந்ததிகளை வழங்குவாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவியேற்பவனாக இருக்கிறாய்!

**துஆ அரபியில்:** ரப்பனா ழலம்னா அன்Fபுஸனா வ இன் (ல்) லம் தஃக்Fபிர் லனா வ தர்ஹம்னா ல நகூனன்ன மினல் காஸிரீன்.

**பொருள்:** எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நாங்களே அக்கிரமம் இழைத்துக் கொண்டோம். எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டத்திற்குரியவர்களாகி விடுவோம்!

**துஆ அரபியில்:** ரப்பனஸ்ரிFப் அன்னா அதாப ஜஹன்னம இன்ன அதாபஹா கான ஃகராமா.

**பொருள்:** எங்கள் இரட்சகனே! எங்களை விட்டும் நரக வேதனையை அகற்றிடு. நிச்சயமாக அதன் வேதனை ஓயாது தொல்லை தரக் கூடியது!

**துஆ அரபியில்:** ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வ துர்ரிய்யாத்தினா குர்ரத்த அஃயுனி(வ்) வஜ் அல்னா லில் முத்தகீன இமாமா.

**பொருள்:** எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியரையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாய் விளங்கச் செய்வாயாக! மேலும் எங்களை பயபக்தியாளர்களுக்கு முன்னோடிகளாக ஆக்குவாயாக!

**துஆ அரபியில்:** அல்லாஹும்ம அஸ்லிஹ்லீ தீனியல்லதி ஹுவ இஸ்மது அம்ரி வ அஸ்லிஹ்லீ துன்யாயல்லத்தீ Fபீஹா மஆதீ வ அஸ்லிஹ் ஆகிரதியல்லத்தீ Fபீஹா மஆதீ வஜ்அலில் ஹயாத்த ஸியாதத(ன்ல்) லீ Fபீ குல்லி கைரின் வல் மௌத்த ராஹத(ன்ல்) லீ மின் குல்லி ஷர்.

**பொருள்:** எனக்கு பாதுகாப்பாய் இருக்கும் என்னுடைய தீனை எனக்கு சீர்படுத்துவாயாக! எனது வாழ்வு எதில் இருக்கிறதோ அத்தகைய எனது உலகத்தை எனக்குச் சீர்படுத்துவாயாக! எங்கு நான் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளதோ அந்த எனது மறுமையை எனக்கு சீர்படுத்துவாயாக! ஒவ் வொரு நன்மையையும் செய்வதற்கு (எனக்கு சாத்தியமாகும் வகையில்) என் வாழ்நாளை அதிகமாக்குவாயாக! மேலும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் அமைதி அளிக்கக் கூடியதாக மரணத்தை ஆக்குவாயாக!

தௌவ்பா உண்னை உயர்த்தும் மோகம் உண்னைத் தாழ்த்தும்

தௌவ்பாவை மரவாதே

www.bathusha.com

Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**